**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

நாள் : 02.08.2023 3 STC 429/2022

**பெயர் : முருகவேல் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மொத்தம் 10 காசோலைகளை பிரித்து 2 வழக்குகளாக எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்னர் வியாபார வரவு செலவு வழக்கறிஞரிடம் காண்பித்து அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் 05.03.2022 வரை எதிரி ரூ.9,58,693/-தரவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 வழக்குகளுக்கும் சேர்த்து மொத்தம் எவ்வளவு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.6,77,525/-. ரூ.9,58,693 க்கும், ரூ.6,77,525 க்கும் வித்தியாச தொகைக்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. புகாரில் நான் தாக்கல் செய்துள்ள பில்களுக்கான காசோலை எது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பில்களில் 18 சதவிகித வட்டி குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக இருவருக்கும் வட்டி குறித்து ஒப்பந்தம் உள்ளது. அதன் பிறகு தான் சரக்குகள் நான் சப்ளை செய்தேன். பல்வேறு வரவு செலவு செய்துள்ளார் என்றும், எந்த வரவு செலவுக்காக காசோலைகள் கொடுத்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரவு செலவு கணக்கு தான் அரசிடம் சமர்ப்பித்துள்ளேன் என்றால் ஆமாம்.

3. ரூ.9,58,693 க்கு முறையாக கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தேதிகளில் எதிரி என்னிடம் வியாபாரம் செய்து வந்ததால் அந்த வியாபாரத்தின் வரவு செலவு பாதுகாப்பிற்காகஎதிரி என்னிடம் கொடுத்து வைத்திருந்த காசோலைகளை சட்டத்திற்கு முரணாக பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பல்வேறு தேதிகளில் பல்வேறு முறை வரவு செலவு செய்ததற்கு எதிரி பல்வேறு முறை பணம் பகுதி பகுதியாக கொடுத்துள்ளார் என்றும், அதற்குண்டான காசோலைகளை திருப்பி தராமலும், நான் முழுத்தொகையும் செலுத்திய பின்பே வழக்கு காசோலைகளை திருப்பி தருவதாக சொல்லி வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எனக்கு எதிரி பல்வேறு தேதிகளில் ரொக்கமாகவும், காசோலையாகவும், RTGS மூலமாகவும் பணம் செலுத்தியுள்ளார் என்றால் எனக்கு ரொக்கமாக வாங்கவில்லை, IMPS மூலமாக என்னுடைய நிறுவனத்திற்கு பணம் அனுப்பியுள்ளார். எதிரியின் வங்கி மேலாளரை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. 04.03.2022 அன்று ரூ.31,500 ஐ IMPS மூலமாக என்னுடைய வங்கிகணக்கிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றால் cash bill எதிரிக்கு போட்டேன், அதற்குண்டான தொகையை அனுப்பியுள்ளார்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,

Erode.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

நாள் : 02.08.2023 4 **STC** 429/2022

**பெயர் : முருகவேல் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

04.03.2022 அன்று ரூ.4500/-எதிரி அனுப்பியுள்ளார் என்றால் cash bill எதிரிக்கு போட்டேன், அதற்குண்டான தொகையை அனுப்பியுள்ளார். அதேபோல் 13.06.2020 அன்று ரூ.50,000 என்னுடைய நிறுவன வங்கிகணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதற்குண்டான கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லியுள்ள மேற்சொன்ன தொகைகள் என்னுடைய கணக்கில் காட்டவில்லை என்றால் சரியல்ல. காண்பித்துள்ளேன்.

5. அதனால் தான் எதிரி மீது 2 வழக்குகளாக பிரித்து ரூ.2,77,525/-க்கு ஒரு வழக்கும், மீதித் தொகைக்கும் ஒரு வழக்கும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படி கொடுக்கவேண்டிய தொகைக்கு மட்டும் தான் நான் சட்ட அறிவிப்பு அனுப்பமுடியும் என்றும், சட்டத்திற்கு முரணாக எதிரியிடமிருந்து துர்லாபம் பெறும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு அவர் என்னை அணுகி வழக்குகாசோலையை திருப்பி தரச்சொல்லி கேட்டதற்கு நான் கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சரியாக வரவு செலவு கணக்குகளை பராமரிக்காமல் சட்டத்திற்கு முரணாக இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகள் சட்டப்படியான மறுபயனுக்காக கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/- சாட்சி : **முருகவேல்**

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1
ஈரோடு.